**<u>கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம் எண்.3 தாராபுரம்</u>**

**<u>அ.வ.எண். 514/2021</u>**

2025 ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 19–ம் நாள் வெள்ளிக்கிழமை **வா.சா.3**

சாட்சியின் சாட்சியம் திரு.C.M.சரவணன்,B.A.,L.L.M., கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி தாராபுரம் அவர்களால் உறுதி கூறப்படுகிறது.

| | | |
|---|---|---|
| பெயர் | செந்தில்குமார் | தொழில் |
| த/பெ | சுப்பையன் | கிராமம் |
| வயது | | தாலுகா |
| | | மாவட்டம் |

**<u>சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு</u>**

**<u>பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

**1.** தாவா ஒப்பந்தம் போடப்பட்டதாக கூறப்படும் காலத்தில் நான் என்னுடைய உரிமையாளரின் அலுவலகம் இருக்கும் திருப்பூரில் இருந்தேன். **05.07.2019** ஆம் தேதி சுமார் பத்து மணிக்கு மேல் மேற்படி ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டது. மேற்படி ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டபோது நான் உடனிருந்தேன் என்றால் சரிதான். நான் முதல் விசாரணை வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ள விவரங்கள் அனைத்தும் என்னுடைய முதலாளியான கிருஷ்ணமூர்த்திக்கு தெரியும் என்று சொன்னால் சரிதான். நான் **1–**ம் பிரதிவாதியுடன் ஏற்படுத்திக் கொண்ட ஒப்பந்தத்தில் வாதி சாட்சி கையெழுத்து எதுவும் போடவில்லை. நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.**3** ல் குறிப்பிட்டுள்ள பூமி வேணுகோபாலுக்கு பாத்தியப்பட்டதாகும். மேற்படி பூமி வேணுகோபால் என்பவருக்கு பாத்தியப்பட்டது என்பதை உறுதி செய்ய நான் ஆவணங்களை பார்வையிடவில்லை என்று சொன்னால் சரியல்ல பார்வையிட்டேன் கிரைய பத்திரத்தை நான் பார்வையிட்டேன். அது எந்த மாதம் எந்த வருடத்தையே கிரைய பத்திரம் என்று எனக்குத் தெரியவில்லை. நான் அவ்வாறு எந்த பத்திரத்தையும்

பார்வையிடவில்லை என்று சொன்னால் சரியல்ல.

2. நான் சொன்ன விபரங்கள் எதுவும் உண்மை இல்லை என்றாலும் அது உண்மையாக இருந்தால் வாதி தனது வழக்குரை அறிவிப்பு ஆகியவற்றில் மேற்படி விபரங்களை குறிப்பிட்டிருப்பார் என்று சொன்னால் சரியல்ல. நான் வாதி ஆகியோர் சேர்ந்து வா.சாஆ–.3 யை வழக்குக்காக பின்னிட்டு தயார் செய்து தாக்கல் செய்துள்ளோம் என்று சொன்னால் சரியல்ல. கிரயம் பெறும் நிலத்திற்கும் என்பதற்கும் கிரயம் பெற்ற நிலத்திற்கும் என்பதற்கும் வேறுபாடு உள்ளது என்று சொன்னால் சரிதான். 05.07.2019 ஆம் தேதி நான் சாட்சி கையெழுத்து எதுவும் போடவில்லை என்று சொன்னால் சரிதான். மேற்படி ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டபோது நான் உடனில்லை என்று சொன்னால் சரியல்ல இருந்தேன். என்னுடைய முதலாளியின் வீடு மற்றும் அலுவலகத்தில் சிசிடிவி கேமரா பொருத்தப்பட்டுள்ளது என்று சொன்னால் ஒப்பந்தம் போடப்பட்ட காலத்தில் சிசிடிவி கேமரா இல்லை தற்போது உள்ளது. மேற்படி ஒப்பந்தம் தயார் செய்யப்பட்ட காலத்தில் நான் உடன் இருந்ததை காட்ட ஆவணம் எதையும் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான்.

3. ஒப்பந்தம் போடப்பட்ட பூமி நான் எப்போது முதன் முதலில் பார்த்தேன் என்று சொன்னால் 2019 ஆம் வருடம் 7–வது மாதம் 2 அல்லது 3 ஆம் தேதி பார்த்தேன். தற்போது கிருஷ்ணமூர்த்தி குடியிருக்கும் வீட்டில் தான் அவரது அலுவலகம் உள்ளது அதுதான் பெரிய வீடு. அங்கு ஒப்பந்த காலத்தில் சிசிடிவி கேமரா இல்லை தற்போது உள்ளது. நான் பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றாலும் கிருஷ்ணமூர்த்தி அலுவலகத்தில் நிமிட வாரியாக பதிவுகள் சிசிடிவி உள்ளது என்று சொன்னால் சரி அல்ல. வாதியின் வீட்டிற்கு வேணுகோபால், தேன்மொழி,விஷ்ணு செந்தூரன், சுவாதி ஆகியோர் 5–ம் தேதி வந்தார்கள். நானும் சோமசுந்தரமும் 1–ம் பிரதிவாதியின் வீட்டிற்கு எத்தனாம் தேதி சென்றோம் என்றால் அது எனக்கு நினைவில்லை.என்னுடைய முதல் விசாரணை வாக்குமூலத்தில் நான் எந்த தேதியில் அங்கு சென்றேன் என்று குறிப்பிடவில்லை என்று சொன்னால் தேதியை குறிப்பிடவில்லை. நான்

அவ்வாறு போகவே இல்லை என்பதால்தான் என்னால் தேதி குறிப்பிடப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல.

4. தாவா கிரைய ஒப்பந்தத்தை கிருஷ்ணமூர்த்தி தனிப்பட்ட முறையில் செய்தாரா அல்லது ஏதேனும் நிறுவனத்தின் பேரில் செய்தாரா என்றால் தனிப்பட்ட முறையில் தான் செய்து கொடுத்தார். கிருஷ்ணமூர்த்தி செய்து கொண்ட ஒப்பந்தம் எந்த நிறுவனத்துடன் சம்பந்தப்படவில்லை என்று சொன்னால் சரிதான் அவர் தனிப்பட்ட முறையில் தான் செய்து கொடுத்தார். கிருஷ்ணமூர்த்தியின் அனைத்து நிறுவனங்களிலும் நான் பணி செய்கிறேன். நான் கிருஷ்ணமூர்த்தி நிறுவனத்தில் பணி செய்கிறேன் என்பதற்கான அடையாள அட்டை எதையும் இதுவரையில் நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தனிநபராக கிருஷ்ணமூர்த்தி, வேணுகோபாலுக்கு என்ன உத்திரவாதம் கொடுத்தார் என்று எனக்கு நேரடியாக தெரியாது என்று சொன்னால் சரியல்ல தெரியும். கிரையம் செய்து கொடுப்பதற்கு தான் தயாராக இருப்பதாக உத்தரவாதம் கொடுத்தார். எனக்கு பணி நியமன ஆணை உள்ளது என்று சொன்னால் சரியல்ல அவ்வாறு உத்தரவு இல்லை. எனக்கு சம்பளம் என்னுடைய வங்கி கணக்கில் செலுத்தப்படுகிறது.

5. ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்ட காலத்தில் வாதியின் வங்கி கணக்கில் எவ்வளவு பணம் இருந்தது என்று எனக்கு தெரியாது. கிரையஒப்பந்த சொத்தில் பத்து ஏக்கர் பள்ளமாக இருக்கிறது என்பதை எவ்வாறு நிர்ணயம் செய்தேன் என்றால் என்னுடைய தொழில் அனுபவத்தின் காரணமாக பார்த்தவுடன் தெரிந்து கொண்டேன். மேற்படி இடத்தை சங்கிலி அல்லது டேப் வைத்து அளந்து பார்த்தோமா என்றால் இல்லை. அனுமானத்தின் பெயரில் தான் மேற்படி அளவை நான் குறிப்பிடுகிறேன் என்று சொன்னால் சரிதான். பள்ளம் இல்லாமல் இருந்தால் மேற்படி பூமியின் மதிப்பு அதிகமாக இருக்கும் என்று சொன்னால் சரிதான். ஒப்பந்தம் போடப்பட்ட தேதியில் 4-ம் பிரதிவாதிக்கு எவ்வளவு பணம் கொடுக்கப்பட்டது என்றால் மொத்தமாக ரூபாய் ஒரு கோடி கொடுக்கப்பட்டது எவ்வளவு பிரித்துக் கொடுக்கப்பட்டது என்று எனக்கு தெரியாது. நான்கு

பேருக்கும் காசோலை கொடுக்கப்பட்டது. நான்கு பேருக்கும் ஒரே காசோலையாக வழங்கப்பட்டது என்று சொன்னால் சரியல்ல தனித்தனி காசோலைகளாக கொடுக்கப்பட்டது. நான்கு பிரதிவாதிகளுக்கும் தனித்தனியாக எவ்வளவு ரூபாய்க்கு காசோலை கொடுக்கப்பட்டது என்றால் எனக்கு தொகை தெரியாது. மேற்படி காசோலைகளை தனித்தனியாக ஒவ்வொரு பிரதிவாதிகளுக்கும் கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல வேணுகோபால் வசம் நான்கு காசோலைகளும் ஒப்படைக்கப்பட்டது அது எந்த வங்கியின் காசோலைகள் என்று எனக்கு தெரியாது. சுமார் 10.00 அல்லது 11.00 மணிக்கு காசோலைகள் கொடுக்கப்பட்டது.

6.கிரைய முன்பணமாக கொடுக்கப்பட்ட ரூபாய் ஒரு கோடி 5–ம் தேதி கொடுக்கப்பட்டது. மேற்படி காசோலைகள் எந்த தேதியில் பணமாக்கப்பட்டன என்ற விபரம் எனக்கு தெரியாது. கிரைய ஒப்பந்தத்திற்கு முன்பு காசோலைகள் கொடுக்கப்பட்டு அதன் பிறகு அன்றைய தினமே கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டது. வாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள ஆவண எண் 6706/ 2019 என்ற ஆவணத்தை நான் படித்துப் பார்த்தேன். நான் குறிப்பிட்டுள்ள சாட்சியங்கள் அனைத்தும் பொய்யானவை என்று சொன்னால் சரியல்ல. ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டதாக கூறப்படும் காலத்தில் தேன்மொழி எங்கள் அலுவலகத்திற்கு வரவே இல்லை என்று சொன்னால் சரியல்ல விஷ்ணு செந்தூரன் என்பவரும் எங்கள் அலுவலகத்திற்கு வரவில்லை என்று சொன்னால் சரியல்ல. சுவாதி என்பவரும் எங்கள் அலுவலகத்திற்கு வரவில்லை என்று சொன்னால் சரியல்ல. சுவாதி என்ன தொழில் செய்கிறார்கள் என்று எனக்கு தெரியாது. நான் கூறிய காலகட்டத்தில் சுவாதி மருத்துவப் பணி செய்து கொண்டிருந்தார் என்று சொன்னால் அது எனக்கு தெரியாது. பிரதிவாதிகளை பார்க்காமலேயே நான் வாதியிடம் வேலை செய்து வருகின்ற காரணத்தினால் பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

7. வாதி, பிரதிவாதியிடம் இதுவரையில் ரூபாய் ஒரு கோடியே 70 லட்சம்

கொடுத்துள்ளார். முன்பண தொகை ஒரு கோடி தவிர மீத தொகையான 70 லட்சம் எப்படி வழங்கப்பட்டது என்று எனக்கு நேரடியாக தெரியாது என்றால் காசோலையாக வழங்கப்பட்டதாக சொன்னார்கள் எனக்கு நேரடியாக தெரியாது. கிருஷ்ணமூர்த்தி வழங்கிய காசோலை அவரது வங்கி கணக்கில் போதிய பணம் இல்லாமல் திரும்பி விட்டதே என்ற விவரத்தை நான் எப்போது தெரிந்து கொண்டேன் என்றால் அலுவலகத்தில் சொன்னார்கள் எப்போது என்று நினைவில்லை. எங்கள் அலுவலகத்தில் பூமிகளை அளந்து பார்ப்பதற்கு நிபுணர்கள் இருக்கிறார்கள் என்று சொன்னால் நான் தான் அளந்து பார்ப்பேன். மேற்படி பூமியை நாங்கள் இரண்டாவது முறை அளக்கவில்லை என்று சொன்னால் சரிதான் பூமியில் பள்ளம் மற்றும் தண்ணீர் இருந்ததால் அளக்கவில்லை.

8. கிரைய ஒப்பந்தத்தை பொறுத்து பெறப்பட்ட சட்டக் கருத்துறை குறித்து எனக்கு எதுவும் தெரியாது என்று சொன்னால் முதலில் சட்டக் கருத்துறை எதுவும் வாங்கவில்லை. எனக்கு தெரிந்தவரை மேற்படி சொத்தைப் பொறுத்து சட்டக் கருத்துறை வாங்கவில்லை. சட்டக் கருத்துறை பெற்றது மற்றும் பூமி அளந்தது குறித்து எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான் கிராவல் நான் தான் போட்டேன். நான்தான் அத்துமீறி பூமியில் புகுந்து கிராவல் போட்டேன் என்று சொன்னால் சரியல்ல 1–ம் பிரதிவாதிசம்மதக்கடிதம் கொடுத்தார். எங்களுடைய கருத்து தொடர்புகள் அனைத்தும் 1–ம் பிரதிவாதியுடன் மட்டும் தான் இருந்தது என்று சொன்னால் மற்ற மூவருக்காகவும் அவர்தான் செயல்பட்டார். மற்ற மூவரிடமும் 1–ம் பிரதிவாதி செயல்பாடு குறித்து கேட்டேனா என்றால் இல்லை. ஒப்பந்ததாரர்களை மீறி 1–ம் பிரதிவாதி நிலத்தில் என்னை அத்துமீற செய்துவிட்டு தற்போது என்னை பொய் சாட்சி அளிக்க வாதி பணித்திருக்கிறார் என்று சொன்னால் சரியல்ல. ஒப்பந்த பத்திரம் எங்கள் அலுவலகத்திலேயே தயார் செய்யப்பட்டது. அது யார் தட்டச்சு செய்தார்கள் என்று விபரத்தை என்னுடைய முதல் விசாரணை வாக்குமூலத்தில் குறிப்பிடவில்லை என்று சொன்னால் அது எங்கள் அலுவலகத்தில் இருந்த

தட்டச்சர்கள் தட்டச்சு செய்தார்கள். மேற்படி ஒப்பந்தத்தில் குறிப்பிடப்படவில்லை என்று சொன்னால் சரிதான்.

9. நான் முதல் விசாரணை வாக்குமூலத்தில் குறிப்பிட்ட சங்கதிகள் அனைத்தும் பொய் என்று சொன்னால் சரியல்ல. காசோலையை உரிய பணம் இன்றி திரும்புவதற்கு விட்டுவிட்டு தற்போது ஏற்றதையாற்றுக்க பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்திருப்பது ஏற்கத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல. காசோலை திருப்பப்பட்டதற்கு பிறகு பணம் கொடுத்ததாக வழக்குக்காக பொய்யாக குறிப்பிடுகிறேன் என்று சொன்னால் சரியல்ல. நான் வாதியின் நிறுவனத்தில் பணி செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. என்னுடைய சாட்சியம் ஏற்கத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை:– இல்லை**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

SARAVANAN MANOKARAN

Digitally signed by SARAVANAN MANOKARAN
Date: 2025.09.19 19:04:12 +0530

3–ம் கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
தாராபுரம்.